# 1980ற்கு பின்னரான மலையகத் தமிழ் இலக்கிய வளர்ச்சி: பதுளை மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
27 FEB 2018
Vantharumoolai
Chenkalady

சிட்டரசு சித்ரா

EU/IS/2011/AC/236

CS 4536

LIBRARY
22 JUN 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA.

FAC557
Project Report
Library - EUSL

மொழித்துறை,

கலை கலாசாரபீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை,

2017.

PROCESSE
Main Library, EU

## முன்னுரை

கிழக்கு பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைக்கு இளங்கலைமாணி இறுதித் தேர்வின் ஒரு தேவையைப் பூர்த்தி செய்வதற்காக "1980ற்கு பின்னரான மலையகத் தமிழ் இலக்கிய வளர்ச்சி: பதுளை மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு." என்ற தலைப்பில் இவ் ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று ஈழத்து இலக்கிய உலகில், மலையக இலக்கியம் தொடர்பான ஆய்வுகள் இடம் பெற்றிருப்பது முக்கியமான விடயமாகும். மலையக மக்கள் தொடர்பாகவும், மலையக இலக்கியம் தொடர்பாகவும் பல ஆய்வுகள் இன்றும் வெளிவந்துக்கொண்டிருக்கின்றன. ஆயினும் மலையகத்தின் தனித்த ஒரு பிரதேசத்தை அடிப்படையாகக்கொண்ட ஆய்வுகள் அவ்வளவாக வெளிவரவில்லை என்றே கூறவேண்டும். எனவே இவ்வாய்வானது மலையகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் பதுளை மாவட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதாவது "1980இற்கு பின்னரான மலையகத் தமிழ் இலக்கிய வளர்ச்சி: பதுளை மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு." என்ற தலைப்பில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் இலக்கியம் என்ற பெருவட்டத்துள் யாழ்ப்பாண இலக்கியம், வன்னி இலக்கியம், திருகோணமலை இலக்கியம், மட்டகளப்பு இலக்கியம், தென்னிலங்கை இலக்கியம் என பாகுபாட்டில் மலையக இலக்கியமும் இன்று முக்கியத்துவம் பெற்றுவருகின்றது. இருப்பினும் "மலையகத் தமிழ் இலக்கியம்" குறித்த ஆய்வில் அதன் தோற்றம், காலம் பற்றிய விடயங்கள் பல்வேறு சிக்கல்களையும் கருத்து முரண்பாடுகளையும் கொண்டுக் காணப்படுகின்றன. இதற்கான முக்கிய காரணம் அதனை பொது நோக்கில் அதாவது மேற்கூறிய வகையிலான மலையக பிரதேச அடிப்படையில் அவ்விலக்கியங்களை ஆய்வு செய்துள்ளமையே ஆகும். எனவே மலையக இலக்கியம் குறித்த தெளிவான வரையறைகளைப் பெற்றுக் கொள்ள மலையகத் தமிழ் இலக்கியம் என்ற பதத்தை விடுத்துக் கண்டித் தமிழ் இலக்கியம், மாத்தளைத் தமிழ் இலக்கியம், பதுளைத் தமிழ் இலக்கியம, நுவரெலியாத் தமிழ் இலக்கியம் என நோக்குவது பெருமளவு பொருத்தமானதகவும் பல்வேறு விடயங்களை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு வாய்ப்பாகவும் அமையும். இதனடிப்படையிலேயே பதுளை தமிழ் இலக்கிய வளர்ச்சிக் குறித்த விடயங்கள் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பதுளை மாவட்டம், மலையக மக்களைக் கொண்டிருப்பினும் பெரும்பான்மையாக சிங்களவர்கள் வாழும் மாவட்டமாகவே விளங்குகின்றது. இதனால் பதுளை வாழ் மலையக மக்களின் இலக்கியங்கள், பண்பாடுகள் தொடர்ந்து இதே நிலையில் காணப்படும் என்பது

கேள்விக்குறியே எதிர்காலத்தில் இவ்விலக்கியங்கள் தொகுக்கப்பட முடியாமல் கூட போகலாம். எனவே அவை தொகுக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதனடிப்படையிலேயே "1980 ற்கு பின்னரான மலையகத் தமிழ் இலக்கிய வளர்ச்சி: பதுளை மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு." என்ற தலைப்பில் ஒரு தொகுப்பு முயற்சியாக இவ் ஆய்வு அமையப்பெற்றுள்ளது.

இவ்வாய்வானது பதுளை மாவட்டத்தின் 1980ற்கு முன்னரான இலக்கிய வளர்ச்சியினை எடுத்துக்காட்டி, இதன் தொடர்ச்சியாக 1980ற்கு பின்னரான இலக்கியங்கள் வளர்ச்சி பெற்று வந்துள்ளதனை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாய்வானது கள ஆய்வின் போது கிடைத்த தகவல்களையும், நூல்கள் சஞ்சிகைகள் என்பனவற்றை சேகரித்தும், மலையக இலக்கியம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நூல்களையும், அதேபோல் ஈழத்து இலக்கிய ஆய்வு நூல்களையும் ஆதாரமாக வைத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாய்வு ஐந்து அத்தியாயங்களைக் கெண்டுள்ளன. முதலாம் அத்தியாயம் ஆய்வு அறிமுகமாகவும் இரண்டாம் அத்தியாயம் ஆய்வு பிரதேச அறிமுகமாகவும் மூன்றாம் அத்தியாயம் 1980ற்கு முன்னரான பதுளை மாவட்ட இலக்கியவளர்ச்சி குறித்த விடயங்களையும் நான்காம் அத்தியாயம் 1980ற்கு பின்னரான பதுளை மாவட்ட இலக்கியவளர்ச்சியினை விபரிப்பதாகவும் இறுதி அத்தியாயத்தில் இவ்வாய்வுக் குறித்த மதிப்பீடாகவும் அமையப்பெற்றுள்ளது.

பதுளை மாவட்ட இலக்கிய வளர்ச்சியை ஆரம்ப இலக்கிய வடிவமான வாய்மொழிப்பாடல்கள் மற்றும் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் என்பன தனித்தனியாக மூன்றாம் நான்காம் இயல்களில் விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் மூலம் மலையகத்தமிழ் இலக்கியவளர்ச்சிக்கு பதுளை மாவட்டத்தின் பங்கு எவ்வாறு உள்ளது என்பதனையும் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் எவ்வாறு முக்கியம் பெறுகிறது என்பதனையும் அறிந்துகொள்ள முடியும்.

ஆய்வாளர்

# பொருளடக்கம்


உறுதியுரை i

நன்றியுரை ii

முன்னுரை iii


## அத்தியாயம் ஒன்று


1.1 ஆய்வுத்தலைப்பு 1

1.2 ஆய்வு அறிமுகம் 1

1.3 ஆய்வு நோக்கம் 1

1.4 ஆய்வுப்பிரச்சினை 2

1.5 ஆய்வுக்கருதுகோள் 2

1.6 ஆய்வின் முக்கியத்துவம் 2

1.7 ஆய்வு மூலங்கள் 2

1.8 இலக்கிய மீளாய்வு 3

1.9 ஆய்வு ஒழுங்கமைப்பு 5


## அத்தியாயம் இரண்டு


2.1 மலையகப் பிரதேச அறிமுகம் 6

2.2 மலையக மக்களின் அடையாளம் 9

2.3 மலையகத் தமிழ் மக்களின் கல்வி, தொழில், அரசியல் நிலைகள் 11

2.3.1 கல்வி 11

2.3.2 தொழில் 12

2.3.3 மலையகத்தில் அரசியல் நிலைமை 14

2.4 பதுளை மாவட்ட அறிமுகம் 16

## அத்தியாயம் மூன்று

3. 1980 இற்கு முன்னரான மலையகத் தமிழ் இலக்கியவளர்ச்சி

3.1 இலங்கை தமிழ் இலக்கிய வளர்ச்சி 21

3.2 பதுளை மாவட்ட நாட்டார் பாடல்கள் 24

3.3 கவிதை வளர்ச்சி 28

3.3.1 1960 களில் பதுளை கவிதை வளர்ச்சி 29

3.3.2 1970 களில் பதுளை கவிதை வளர்ச்சி 37

3.4 சிறுகதை 40

3.4.1 1960 களில் பதுளையின் சிறுகதை வளர்ச்சி 41

3.4.2 1970 களில் ப்துளையின் சிறுகதை வளர்ச்சி 46

3.5 நாவல் 49

3.6 நாடகம் 63

3.7 ஏனைய இலக்கிய முயற்சிகள் 67

3.7.1 பதுளையின் இலக்கிய மன்றங்கள் 67

## அத்தியாயம் நான்கு

4. 1980ற்கு பின்னரான பதுளை மாவட்ட தமிழ் இலக்கிய வளர்ச்சி 75

4.1 கவிதை 75

4.2 சிறுகதை 83

4.3 பதுளை மாவட்ட நாவல்கள் 86

4.4 நாடக முயற்சிகள் 90